අත්‍යවශ්‍ය සේවා කොමසාරිස් ජනරාල් කාර්යාලය
அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் அலுவலகம்
OFFICE OF THE COMMISSIONER GENERAL OF ESSENTIAL SERVICES

2025 டிசம்பர் 01: இரவு 10.30 மணி
File Number : 2025/03

# ஊடக அறிக்கை

## சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அனர்த்த நிவாரண மற்றும் மீள் நடவடிக்கைகள்

நாட்டைப் பாதித்த சூறாவளியால் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக, 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறப்புப் பதிவுகள் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பகுதியின் 9 ஆம் பிரிவின் கீழ், பாதிக்கப்பட்ட பகுதிகளை "தேசிய அனர்த்தப் பகுதிகள்" என வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்க, பதிவாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பார். அனர்த்தத்தின் போது உயிரிழந்தவர்களுக்கான இறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கும், காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டவர்களின் இறப்பைப் பதிவு செய்வதற்கும் இது வழிவகுக்கும். அதன்படி, பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் காணாமல் போனவர்களின் இறப்புகளைப் பதிவு செய்வதற்கு அதிகாரமளிக்கப்படுவர், இதன் மூலம் உத்தியோகபூர்வமான பதிவு நடைமுறை உடனடியாக ஆரம்பிக்கப்படும்.

இன்று காலை அடையாளம் காணப்பட்டதன் பிரகாரம், நாடு முழுவதும் 108 வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சூழலில், LP எரிவாயுவை முறையாக விநியோகிப்பதில் ஏற்படக்கூடிய சாத்தியமான சவால்களைக் கண்டறிந்து, உடனடித் தீர்வுகளை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக லிட்ரோ காஸ் (Litro Gas) நிறுவனத்துடன் கலந்துரையாடல்களை நடத்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அனர்த்த நிலைமையின் போது பொதுமக்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதில் எதிர்கொள்ளும் சிரமங்களைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு அறிவிக்கும் வகையில், மாவட்டச் செயலாளர்கள் சமர்ப்பித்த அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களின் பட்டியல்கள் ஊடகங்கள் மூலம் ntspaplg;gLfpd;wd.
விநியோகஸ்தர்கள் அந்தந்த மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களைத் தொடர்புகொண்டு, அடையாளம் காணப்பட்ட தேவைகளை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கூடுதலாக, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நடுத்தர கால நிவாரணத்தை வழங்குவதற்காக, பிரதேச செயலாளர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களையும், ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விபரங்களையும் பிரதமர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு மாவட்டச் செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பிரதமரின் செயலாளர் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட எளிதில் அணுகக்கூடிய வடிவத்தில் இந்தத் தேவைகள் காட்சிப்படுத்தப்படும். இதன் மூலம் உள்ளூர் மற்றும் சர்வதேச நன்கொடையாளர்கள் தாங்கள் வழங்கக்கூடிய பொருட்களைத் தெளிவாக அடையாளம் காண முடியும். இந்த முறையானது:

- அனாவசியப் பொருட்கள் கிடைப்பதைத் தடுக்கும்,
- அத்தியாவசியத் தேவைகள் துல்லியமாக அடையாளம் காணப்படுவதை உறுதி செய்யும்,
- சம்பந்தப்பட்ட இடங்களுக்கு உதவிகளை முறையாக வழங்குவதற்கு வசதி செய்து கொடுக்கும்,

என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், வெளிநாடுகளில் இருந்து வழங்கப்படும் பொருட்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பெயரில் ஏற்றுக்கொள்ளப்படும், இதனால் அத்தகைய விநியோகங்களுக்குத் தேவையான வரிச் சலுகைகள் வழங்க முடியும்.
கூடுதலாக, கமத்தொழில் திணைக்களத்தின் தரநிலைகளைப் பூர்த்தி செய்யும் உறைந்த காய்கறிகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**பி.கெ.பிரபாத் சந்திரகீர்த்தி**
**அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்**

**Email Address: cg@esgovsl.com**
අංක 150, ආර්.ඒ. ද මෙල් මාවත, කොළඹ 03, ශ්‍රී ලංකාව
எண். 150, ஆர்.ஏ. டி மல் மாவத்தை, கொழும்பு 03, இலங்கை
No. 150, R.A. De Mal Mawatha, Colombo 03, Sri Lanka